வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : கிருஷ்ணமூர்த்தி ராமசுப்ரமணியன்

தேதி : 26.05.2026 – செவ்வாய்க்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

உலக எரிபொருள் சந்தையில், ஸ்திரத்தன்மை, வெளிப்படைத் தன்மை, பாதுகாப்பு மற்றும் நெகிழ்வுத் தன்மையை மேம்படுத்த, இந்தியா உள்ளிட்ட QUAD நாடுகள் உறுதிப்பாடு வெளியிட்டுள்ளன.

பிரதமர் திரு. நரேந்திர மோடி பதவியேற்ற பின்னர், நாட்டின் தன்னம்பிக்கை மீட்கப்பட்டு, கலாச்சார மறுமலர்ச்சியும் பெருகி உள்ளதாக, பிஜேபி தலைவர் திரு. நிதின் நபின் கூறியுள்ளார்.

தமிழகத்தில், மற்றொரு அஇஅதிமுக எம்எல்ஏ திரு. இசக்கி சுப்பையா, சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

புதுச்சேரி ஜிப்மர் வளாகத்தில் இளம் தலைமுறையினருக்கு ஏற்ற அடுத்த தலைமுறை N.Gen. அஞ்சலகம் இன்று திறக்கப் பட்டுள்ளது.

QUAD ***மாநாடு -1 (17)***

உலக அளவிலான எரிபொருள் சந்தையில், ஸ்திரத்தன்மை, வெளிப்படைத் தன்மை, பாதுகாப்பு மற்றும் நெகிழ்வுத் தன்மையை மேம்படுத்த, இந்தியா, ஆஸ்திரேலியா, ஜப்பான், அமெரிக்கா ஆகிய QUAD நாடுகள், தங்களின் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தி உள்ளன. இந்தோ – பசிபிக் பிராந்தியத்தின் எரிசக்தி பாதுகாப்பு குறித்து இன்று புதுடெல்லியில், QUAD வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் வெளியான அறிக்கையில் இவ்வாறு வலியுறுத்தப் பட்டது.

ஹோர்மூஸ் நீரிணை உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளிலும், எண்ணெய் மற்றும் சரக்கு கப்பல்கள் தடையின்றி பயணிப்பதை

உறுதிப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும், QUAD நாடுகள் வலியுறுத்தி உள்ளன. உலக அளவிலான எரிசக்தி சந்தையில், பாதிப்பு ஏற்படும்போது, பரஸ்பர எரிசக்தி பாதுகாப்பிற்கான ஒத்துழைப்பை வலுப்படுத்திக் கொள்ளவும், QUAD வெளியுறவு அமைச்சர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர்.

வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திரு. மார்க்கோ ரூபியோ, ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் திருமதி. பென்னி வோங், ஜப்பானிய வெளியுறவு அமைச்சர் திரு. டோஷிமிட்சு மோட்டேகி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### QUAD *மாநாடு - 2 (3)*

அமெரிக்க வெளியுறவு அமைச்சரின் இந்தியப் பயணத்தின் போது, முக்கியக் கனிமங்கள், மற்றும், அபூர்வத் தனிமங்களின் விநியோகம் மற்றும் பயன்பாடு குறித்து, இரு நாடுகளுக்கும் இடையே, முக்கிய கட்டமைப்பு விதிகளும் இறுதியாகி உள்ளன.

### *பன்னிரெண்டு ஆண்டுகள் -1 (9)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி பதவியேற்ற பின்னர், நாட்டின் தன்னம்பிக்கை மீட்கப்பட்டு, கலாச்சார மறுமலர்ச்சியும் பெருகி உள்ளதாக, பிஜேபி தலைவர் திரு. நிதின் நபின் கூறியுள்ளார். பிரதமராக திரு. நரேந்திர மோடி பதவியேற்று இன்றுடன் பன்னிரண்டு ஆண்டுகள் ஆவதை ஒட்டி, சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவில் அவர் இவ்வாறு கூறியுள்ளார். **நாட்டிற்கே முதலிடம்** என்ற அடிப்படையில், மக்களுக்கு நல்லாட்சி வழங்குவதில், அரசின் இந்த **பன்னிரண்டு ஆண்டுப் பயணம்**, முன்னேறிய இந்தியாவை உருவாக்குவதற்கான, வலுவான அடித் தளமாகவே திகழ்வதாக அவர் தெரிவித்துள்ளார். இது குறித்து கூடுதல் தகவல்கள்...

***பன்னிரெண்டு ஆண்டுகள் - 2 (13)***

பிரதமர் திரு. நரேந்திர மோடி, அரசின் கொள்கை ஆவணங்களை, மாற்றத்திற்கான கருவியாகவே மாற்றி இருப்பதாகவும், **அனைவருக்கும் வளர்ச்சி – அனைவருக்கும் ஆதரவு - அனைவருக்கும் நம்பிக்கை – அனைவரின் முயற்சி** என்பதே அரசின் தாரக மந்திரம் என்றும், திரு. நிதின் நபின் கூறியுள்ளார். **பாரம்பரியத்துடன் கூடிய வளர்ச்சி** என்னும் அரசின் கொள்கையினால், நாட்டில் நவீன உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படும் அதே வேளை, கலாச்சார பெருமிதமும் வலுப்பட்டு வருவதாக, அவர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் இந்தியா தற்போது, சொந்த இறையாண்மையை காத்துக் கொள்ளும் திறன் படைத்த, வலுவான, பாதுகாப்பான நாடாக, உலக அரங்கில் நிற்பதாக, அவர் மேலும் கூறியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் உள்ளிட்டவர்களும் அரசின் பன்னிரெண்டு ஆண்டு சாதனைகள் குறித்து செய்தி வெளியிட்டுள்ளனர்.

***மோடி புத்தகம் (14)***

மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சவுகான், பிரதமர் திரு. நரேந்திர மோடி உடனான, தமது நீண்ட கால அனுபவங்கள் குறித்து, **அப்னாபன்** என்ற தலைப்பில் எழுதியுள்ள நூலை, இன்று, புதுடெல்லியில், முன்னாள் குடியரசு துணைத் தலைவர் திரு. வெங்கையா நாயுடு வெளியிட்டார். குஜராத் முதலமைச்சராக திரு. நரேந்திர மோடியும், மத்திய பிரதேஷ் முதலமைச்சராக திரு. சவ்கானும் இருந்தபோது, இருவரும் இணைந்து, இரு மாநில மக்களின் நலனுக்கு பாடுபட்ட விதம் குறித்து, இந்நூலில் விவரிக்கப்பட்டுள்ளது. வளர்ந்து வரும் அரசியல்வாதிகள் உட்பட அனைவரும், இந்நூலை படிக்க வேண்டியது அவசியம் என, திரு. வெங்கையா நாயுடு தமது உரையில் கூறினார். முன்னாள் பிரதமர் திரு. தேவகவுடா, மத்திய அமைச்சர்கள் திரு. மனோகர் லால், டாக்டர் மன்சுக் மாண்டவியா, மத்திய பிரதேஷ் முதலமைச்சர் திரு. மோகன் யாதவ், டெல்லி முதலமைச்சர் திருமதி. ரேகா குப்தா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும், நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டனர்.

***PM வாணி (10)***

இண்டர்நெட் சேவை அதிகம் இல்லாத பகுதிகள் மற்றும் இதர பகுதிகளில், சிறு அளவிலான ஹாட்-ஸ்பாட் மையங்கள் மூலம், பயனர்களுக்கு இண்டர்நெட் இணைப்பு வழங்குவதற்கான பிஎம் - வாணி திட்டத்தின் கீழ், பயனர்களின் வசதிக்கான பல்வேறு புதிய சீர்திருத்தங்களை மத்திய அரசு அறிவித்துள்ளது. QR Code மூலமான பயனர் அங்கீகாரம், எளிய ஹாட்-ஸ்பாட் பெயர்கள், குறைந்த கட்டணத்தில் குறுகிய காலத்திற்கான சேவைத் திட்டங்கள் போன்ற அம்சங்கள் இதில் அடங்கும். வரும் ஜூலை மாதத்திற்குள், இப்புதிய வசதிகள் பயனர்களுக்கு கிடைப்பதை உறுதிப்படுத்துமாறு, பிஎம் – வாணி திட்டத்துடன் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருக்கும், அறிவுறுத்தப் பட்டுள்ளது.

***அமித் ஷா ராஜஸ்தான் (7)***

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று, ராஜஸ்தானில், பாகிஸ்தான் உடனான சர்வதேச எல்லைப் பகுதியில் உள்ள சஞ்ச்சு புறக்காவல் நிலையத்திற்கு நேரில் சென்று, எல்லைப் பாதுகாப்புப் படையினருடன் கலந்துரையாடினார். எல்லைப் பகுதிகளுக்கான துடிப்பான கிராமங்கள் திட்டத்தின் 2ஆம் கட்டப் பணிகளையும் அவர் தொடக்கி வைத்தார். ராஜஸ்தான் முதலமைச்சர் திரு. பஜன்லால் ஷர்மா, மத்திய சட்டத்துறை அமைச்சர் திரு. அர்ஜுன் ராம் மேக்வால் உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர்.

***அதிமுக*** (14)

தமிழகத்தில், மற்றொரு அஇஅதிமுக எம்எல்ஏ திரு. இசக்கி சுப்பையாவும், சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்து விட்டு, ஆளும் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்து உள்ளார். இதையும் சேர்த்து, திரு. எஸ்.பி. வேலுமணி தலைமையிலான அஇஅதிமுக அணியில் இருந்து விலகி, ஆளும் கட்சியில் சேர்ந்த எம்எல்ஏக்களின் எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளது. இந்த அணியைச் சேர்ந்த 3 எம்எல்ஏக்கள், நேற்று சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்தனர். ராஜினாமா கடிதங்கள், உரிய நடைமுறைகளின் கீழ், ஏற்கப்பட்டுள்ளதாக, சட்டப்பேரவைத் தலைவர் திரு. JCD பிரபாகர் தெரிவித்தார். இதைத் தொடர்ந்து, தமிழக சட்டமன்றத்தில் அஇஅதிமுக-வின் வலு குறைந்துள்ளது. இதற்கிடையே, எம்எல்ஏக்களின்

ராஜினாமாவை ஏற்கும்போது, கட்சித் தாவல் தடைச் சட்ட விதிகளை பின்பற்றக் கோரி, அஇஅதிமுக, சட்டப் பேரவைத் தலைவரிடம் கடிதம் கொடுத்துள்ளது. ஆளும் தமிழக வெற்றிக் கழகம், குதிரை பேரத்தில் ஈடுபடுவதாகவும், அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.

***புதுச்சேரி அஞ்சலகம் (10)***

இந்திய அஞ்சல் துறை சார்பில், புதுச்சேரி ஜிப்மர் வளாகத்தில் இளம் தலைமுறையினர் உள்பட அனைத்து வாடிக்கையாளர்களையும் கவரும் விதத்தில், இலவச wi-fi உள்ளிட்ட அதிநவீன வசதிகளுடன் மேம்படுத்தப்பட்ட, அடுத்த தலைமுறை N.Gen. அஞ்சலகம் இன்று தொடங்கப்பட்டது. ஜிப்மர் துணை இயக்குநர் திரு. ரங்கபாஷ்யம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு அதி நவீன அஞ்சலகத்தை திறந்து வைத்தார். சென்னை மாநகர் மண்டல அஞ்சல் துறை இயக்குநர் மேஜர் மனோஜ், புதுச்சேரி அஞ்சல் கோட்ட முதுநிலை கண்காணிப்பாளர் திருமதி. இனகொல்லு காவியா உள்பட மூத்த அதிகாரிகளும் கலந்து கொண்டனர். மேஜர் மனோஜ் இது குறித்து செய்தியாளர்களிடம் பேசுகையில்…

***பருவமழை -1 (18)***

தென்மேற்கு பருவமழை, இன்று அல்லது நாளை வாக்கில், கேரளத்தை எட்டும் என எதிர்பார்க்கப் படுகிறது. ஜுன் 1ஆம் தேதி கேரளத்தில் பருவமழை தொடங்குவது வழக்கம் என்ற நிலையில், மாநிலத்தின் தென்பகுதிகளில் இன்றே பரவலாக மழை பெய்து வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதற்கிடையே, தமிழகத்திலும், புதுச்சேரி – காரைக்கால் பகுதிகளிலும், ஜுன் 1ஆம் தேதி வரை, மழை நீடிக்கலாம் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்று, தமிழகத்தில் ஓரிரு இடங்கள், மற்றும், புதுச்சேரி – காரைக்கால் பகுதிகளில், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என, வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கோவை-திருப்பூர் மாவட்ட மலைப்பகுதிகள், நீலகிரி, சேலம், ஈரோடு, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் பலத்த காற்றுடன் கூடிய கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும், தெரிவிக்கப் பட்டுள்ளது.

வரும் 30ஆம் தேதி வரையிலான காலகட்டத்தில், தமிழக உள்பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை, ஓரிரு இடங்களில், 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை உயரக்கூடும் என்றும், கடலோர தமிழகத்தில், வெப்பநிலை மற்றும் ஈரப்பதம் அதிகமாகும் பட்சத்தில், அசவுகரியம் ஏற்படலாம் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

***பருவமழை - 2 (3)***

சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள தமிழக கடலோரப் பகுதிகள், வங்கக் கடல் பகுதிகள், மற்றும் அரபிக் கடல் பகுதிகளுக்கு, மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

***மீனவர் மீட்பு (5)***

வேதாரண்யம் கடற்கரைக்கு அப்பால் பலத்த காற்று மற்றும் கொந்தளிப்பினால் கவிழ்ந்து போன படகு ஒன்றில் இருந்து, 3 மீனவர்கள் பத்திரமாக மீட்கப் பட்டுள்ளனர். காணாமல் போன மற்றொரு மீனவரை தேடும் பணிகளில் கடலோரக் காவல் படையினர் மற்றும் கடலோர காவல் நிலைய போலிசார், உள்ளூர் மீனவர்களுடன் இணைந்து, ஈடுபட்டு வருகின்றனர்.

***ஐபிஎல் (8)***

ஐபிஎல் கிரிக்கெட்டில், இன்று இரவு 7.30 மணிக்கு, தரம்சாலாவில் நடைபெறும் முதலாவது குவாலிபயர் போட்டியில், பெங்களூரு – குஜராத் அணிகள் மோத உள்ளன. இப்போட்டியில் வெற்றி பெறும் அணி, நேரடியாக இறுதிப் போட்டிக்கு முன்னேறும். இன்றைய போட்டியில் தோல்வியடையும் அணிக்கு, 2ஆவது குவாலிபயர் போட்டியில், மற்றொரு வாய்ப்பு கிடைக்கும். நியூ சண்டிகரில் நாளை நடைபெற உள்ள எலிமினேட்டர் போட்டியில், ஹைதராபாத் – ராஜஸ்தான் அணிகள் மோத உள்ளன. எலிமினேட்டர் போட்டியில் வெற்றி பெறும் அணி, 2ஆவது குவாலிபயர் போட்டிக்குத் தகுதி பெறும்.

***ே□ாகா (17)***

அஹமதாபாத்தில் நடைபெற உள்ள, முதலாவது உலக யோகா சாம்பியன் பட்டப் போட்டிகள், இந்தியாவின் பாரம்பரிய யோகக் கலையை உலக விளையாட்டாக மேம்படுத்தும் முயற்சிகளில் முக்கிய நடவடிக்கையாக அமையும் என, மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா

கூறியுள்ளார். இன்று, புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியாவில் தோன்றிய யோகக் கலை தற்போது, உலகின் பல நாடுகளில் அன்றாட வாழ்வின் ஒருங்கிணைந்த பகுதியாகவே மாறி இருப்பதாகக் கூறினார். உலக யோகா சாம்பியன் பட்டப் போட்டிகளில் பங்கேற்க, இதுவரை 75 நாடுகள் பதிவு பெற்றுள்ளதாகவும், பல்வேறு நாடுகளில் இருந்து, சுமார் 500 போட்டியாளர்கள் இதில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப் படுவதாகவும் அவர் தெரிவித்தார். யோகக் கலை உலக அளவில் ஏற்கப்படுவதால், மக்களின் நலவாழ்வு மட்டுமின்றி, சர்வதேச அளவில் இந்தியாவின் மதிப்பும், வேலைவாய்ப்புகளும் அதிகரிக்கும் என்று அவர் குறிப்பிட்டார். முதலாவது உலக யோகா சாம்பியன் பட்டப் போட்டிகளுக்கான, சின்னம், மேல்சட்டை மற்றும் தகவல் வீடியோவையும் அமைச்சர் இன்று வெளியிட்டார்.

***கதர் விற்பனை (13)***

2025-26ஆம் நிதியாண்டில், கதர் கிராம தொழில் வாரியத்தின் வருடாந்திர விற்பனை, 1 லட்சத்து 87 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரித்து, புதிய மைல் கல் எட்டப்பட்டுள்ளது. பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில், லட்சக் கணக்கிலான, ஊரகக் கலைஞர்கள் கடுமையாக உழைத்து, இந்த சாதனையை எட்டி இருப்பதாக, KVIC தலைவர் திரு. மனோஜ் குமார், இன்று, புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார். கதர் கிராம தொழில் வாரியம், சுமார் 2 கோடி பேருக்கு வேலை வாய்ப்பு அளிப்பதாகவும், இதில் 80 சதவிகிதம் பேர் பெண்கள் என்றும் அவர் தெரிவித்தார். 12 ஆண்டுகளுக்கு முன்னர், வாரியத்தின் ஆண்டு விற்பனை, 30 முதல் 32 ஆயிரம் கோடி ரூபாயாக மட்டுமே இருந்ததை, திரு. மனோஜ் குமார் சுட்டிக் காட்டினார். கதர் விற்பனையை மேலும் அதிகரிக்கும் வகையில், இ-வர்த்தக இணையதளம் விரைவில் தொடங்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

உலக எரிபொருள் சந்தையில், ஸ்திரத்தன்மை, வெளிப்படைத் தன்மை, பாதுகாப்பு மற்றும் நெகிழ்வுத் தன்மையை மேம்படுத்த, இந்தியா உள்ளிட்ட QUAD நாடுகள் உறுதிப்பாடு வெளியிட்டுள்ளன.

பிரதமர் திரு. நரேந்திர மோடி பதவியேற்ற பின்னர், நாட்டின் தன்னம்பிக்கை மீட்கப்பட்டு, கலாச்சார மறுமலர்ச்சியும் பெருகி உள்ளதாக, பிஜேபி தலைவர் திரு. நிதின் நபின் கூறியுள்ளார்.

தமிழகத்தில், மற்றொரு அஇஅதிமுக எம்எல்ஏ திரு. இசக்கி சுப்பையா, சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

புதுச்சேரி ஜிப்மர் வளாகத்தில் இளம் தலைமுறையினருக்கு ஏற்ற அடுத்த தலைமுறை N.Gen. அஞ்சலகம் இன்று திறக்கப் பட்டுள்ளது.